மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: (அ) ஆம்.

(இ) சுமார் 1½ அடி உயரமுள்ள ஐம்பொன்னாலான அம்மன் சிலை 28—3—1974 அன்று இரவு களவு போனது. இதன் மதிப்பு சுமார் ரூ. 600. காவல் துறையினரால் வழக்கு பதிவு செய்யப்பட்டு விசாரணையில் உள்ளது.

Tiruchendur and Tranqubar temples

*235 Q.—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state the steps taken to protect the temples at Tiruchendur and Tranqubar from sea erosion?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: கடல் அரிப்பை தடுக்கும் பொருட்டு திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி கோவிலைச்சுற்றி ரூ. 3.50 லட்சம் செலவில் காப்புச் சுவர் கட்டப் பட்டுள்ளது. தரங்கம்பாடியில் உள்ள அருள்மிகு மாசிலா மணிநாத சுவாமி திருக்கோயிலைப் பொறுத்த மட்டிலும் ஏற்கனவே அது அரிப்பினால் பாதிக்கப்பட்டிருப்பதனாலும் கடல் நீர் ஏற்கனவே அதைச் சூழ்ந்து விட்டபடியாலும் தடுப்புச்சுவர் அமைத்து கோயிலைப் பாதுகாக்க இயலாது. எனவே அக்கோயிலை நகரின் பிறிதொரு இடத்திற்கு மாற்றியமைக்க உத்தேசிக்கப் பட்டுள்ளது.

திரு. என். கிட்டப்பா: தரங்கம்பாடி கடற்கரை ஓரமுள்ள கோயில் நீண்டகாலமாக கடலரிப்பினால் பாதிக்கப்பட்டு வருகிறது. பூம்புகாரை உருவாக்கியுள்ள அரசு பக்தர்களைப் பரவசப்படுத்தும் அளவுக்கு தரங்கம்பாடியில் இப்போது கோயில் இருக்கின்ற இடத்திலேயே ஆண்டவனைக் காப்பாற்ற நல்ல தடுப்புச் சுவர் உருவாக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தடுப்புச் சுவர் கட்டிக் காப்பாற்ற முடியாத அளவுக்கு கடலரிப்பு ஏற்பட்டு விட்டது. ஆகவே, வேறொரு இடத்தில் சுமார் இரண்டு லட்சம் ரூபாய் செலவில் கோயிலைக் கட்டுவதற்கான ஏற்பாடுகள் தற்போது நடை பெற்று வருகின்றன.

1975 மார்ச் 7]

திரு. தொ. ப. சீனிவாசன்: திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோயில் கடலரிப்பினுல் பாதிக்கப்படாமல் இருக்க தடுப்பு சுவர் கட்டியதாகச் சொன்னுர்கள். அதற்கு மத்திய அரசு, மாநில அரசு நிதி உதவி அளித்திருக்கிறதா? அல்லது கோயில் நிதியில் இருந்து முழுமையாகச் செலவழித்துக் கட்டப்பட்டதா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: பொதுவாக கடலரிப்புகள் ஏற்படுகிற நேரத்தில் மத்திய அரசாங்கப் பொறுப்பில்தான் இது வரை அந்தக் காரியத்தைச் செய்து வந்திருக்கிருர்கள். ஏற்கனவே மத்திய அரசாங்கத்தை அணுகி உதவி கேட்டபோது அப்படிப்பட்ட உதவிகள் செய்ய இயலாது என்று தெரிவித்த பிறகு கோயில் நிதியிலிருந்து 3½ லட்சம் ரூபாய் செலவழிக்கப் பட்டு தடுப்புச் சுவர் கட்டப்பட்டது.

திரு. ஏ. எம். இராஜா: தரங்கம்பாடியில் இருக்கும் ஆண்டவன் கோயில் கடலரிப்பினுல் பாதிக்கப்பட்டிருப்பதால் வேறு இடத்தில் 2 லட்சம் ரூபாய் செலவில் கோயிலைக் கட்ட முயற்சி இருப்பதாக அமைச்சர் அவர்கள் கூறினுர்கள். ஆண்டவன் சர்வ வல்லமை படைத்தவர் என்று சொல்லுகிருர்கள். தன்னையே காத்துக் கொள்ள முடியாத கையாலாகாத ஆண்டவனுக்கு இரண்டு லட்சம் ரூபாய் செலவழித்து . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கையாலாகாத ஆண்டவன் என்று சொல்ல வேண்டாம்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: இந்த மன்றத்தில் நாத்திகக் கொள்கையைப் பரப்புகின்ற கேள்வியைக் கேட்க அனுமதிக்கக் கூடாது. ஆத்திகர்கள் மனத்தையெல்லாம் புண்படுத்தும் கேள்வி யாதலால் அதற்குத் தாங்கள் அனுமதி அளிக்கக்கூடாது. வேண்டு மானுல் வெளியே இதையெல்லாம் வைத்துக் கொள்ளட்டும். இதை அனுமதிக்காமல் இருப்பது சாலச் சிறந்ததாக இருக்குமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: கடலரிப்பினுல் தன்னைக் காத்துக் கொள்ள முடியாத ஆண்டவன் என்று மதிப்பிற்குரிய ராஜா அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆண்டவன் சித்தம் கடலுக் கருகில் இருக்க முடியாது, ஊருக்குள்ளே இருக்கலாம் என்று நினைத்த காரணத்தால் கடலரிப்பு ஏற்பட்டு இருக்கலாம்.

[1975 மார்ச் 7

திரு. ஏ. எம். இராஜா : இந்த ஆண்டவனுக்கு 2 லட்சம் ரூபாய் செலவு செய்வதற்குப் பதிலாக நடமாடும் தெய்வங்களுக்கு இந்த நாட்டில் செய்ய வேண்டிய வேலைகள் ஏராளமாக இருப்ப தால் அதற்கு இந்தத் தொகையைச் செலவழிக்க முயற்சி செய்யப் படுமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : நடமாடும் தெய்வங்களான மனிதர்களுக்கும் செலவு செய்கிறோம். அதே நேரத்தில் கோயில் மூலமாக வருகின்ற வருவாயைக் கொண்டு கோயிலைப் பாதுகாக்க வேண்டியது நம்முடைய கடமை என்ற வகையிலே அந்தக் காரி யத்தையும் செய்கிறோம்.

திரு. செ. அரங்கநாயகம் : ஆண்டவனைக் காப்பாற்ற வேண்டு மென்று மாண்புமிகு உறுப்பினர் கிட்டப்பா அவர்கள் கேட்டுக் கொண்டார்கள். பத்திரிகைச் செய்திகளில் அரசைக் காப்பாற்ற வேண்டுமென்று வருண ஜெபம் செய்வதாகப் படிக்கிறேன். இப்போது யார் யாரைக் காப்பாற்றிக் கொண்டிருக்கிறார்கள்?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : யார் யாரைக் காப்பாற்று கிறார்கள் என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். உறுப்பினர் அவர்கள் உறுப்பினரைக் காப்பாற்ற வேண்டுமென்று இந்தக் கேள்வியைக் கேட்கிறார். ஒவ்வொருவரும் அவரவர்களைக் காப் பாற்றிக் கொள்ள வேண்டுமென்று நினைக்கிறார்கள்.

திரு. எஸ். வடிவேல் : திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி பணக்கார சாமி; அங்கு கடலரிப்பினால் பாதிக்கப்படாமல் சுவர் கட்டியிருக்கிறார்கள். தரங்கம்பாடியில் கட்டவில்லை. ஆசாமியில் தான் ஏழை, பணக்காரன் என்றால், சாமியிலும் ஏழை சாமி, பணக்கார சாமி என்ற பாகுபாடா? தரங்கம்பாடியிலும் தடுப்புச் சுவர் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : சாமிக்குச் சுவர் எழுப்ப வில்லை. கோயிலைக் காப்பாற்ற சுவர் எழுப்புகிறோம். தரங்கம் பாடியில் சுவர் எழுப்புகின்ற நிலைமை மாறி கடல் நீரில் மூழ்கி விடுகிற நிலைமை இருக்கும் காரணத்தால் வேறு இடத்திற்கு கோயிலை மாற்ற முடிவு செய்யப்பட்டுள்ளது.

திரு. ஜே. ஜேம்ஸ் : ஆண்டவன் மீது நம்பிக்கையில்லாமல் இங்கே பேசிக் கொள்ளுகிறார்கள். அப்பேர்பட்டவர்கள் ரகசிய மாக பல கோயில்களில் ஆண்டவனைத் தரிசிக்கிறார்கள். . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது கேள்வியில் வராது.

1975 மார்ச் 7]

திரு. எம். சுரேந்திரன் : தரங்கம்பாடி கோயிலில் கடலரிப்பு ஏற்பட்டு விட்ட காரணத்தால் அதை வேறு இடத்திற்கு மாற்றுவதாகச் சொன்னார்கள். அப்படி மாற்றுவதற்கு தெய்வ அனுமதி பெறப்பட்டிருக்கிறதா? அல்லது மனித அனுமதியின் பேரில் செய்யப்படுகிறதா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தெய்வ நம்பிக்கையுள்ளவர்களிடத்தில் அனுமதி பெற்ற பிறகுதான் செய்யப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்).

2. நடைமுறைக் கேள்விகள்.

(அ) 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' நாளிதழில் தி.மு.க. உறுப்பினர் ஒருவரை அ.தி.மு.க. உறுப்பினர் என குறிப்பிடப்பட்டுள்ளது குறித்து.

திரு. நா. வீராசாமி : ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர் சார். இன்று இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையில் 5-வது பக்கத்தில் ஒரு செய்தி வெளியிடப்பட்டிருக்கிறது.

"MLA wants to carry a stick"

"In the Assembly on Thursday, Mr. Durai Murugan (ADMK) asked the Speaker for permission to arm himself with a stick before coming to the Assembly" என்று போட்டிருக்கிறது.

திரு. துரைமுருகன் அவர்கள் எங்கள் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். அவர் இப்படிப்பட்ட தவறான காரியங்களைச் செய்ய மாட்டார். சட்டமன்ற உறுப்பினர்கள் சிலர் ஒரு கட்சியிலிருந்து போய்க் கொண்டிருக்கிறார்கள். பத்திரிகைகளாகப் பார்த்து சிலரை இப்படி அனுப்பிக் கொண்டிருந்தால் அது கட்சிகளுக்கு ஆபத்து. சபாநாயகர் அவர்கள், பத்திரிகைகள் செய்திகளைப் போடும்போது முறையாகப் போட ஏற்பாடு செய்ய வேண்டும். திரு. துரைமுருகன் அவர்கள் தப்பித் தவறி தொகுதிக்குப் போனால் கழகத் தோழர்கள் கண்டனம் தெரிவிக்கக்கூடும். சட்டமன்ற உறுப்பினர்களைப் பற்றித் தவறாக இப்படிச் செய்திகள்